DEPOSITION OF WITNESS

Judicial form No,53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI**

| | |
|---|---|
| Calender | : CC 12-2020 |
| Miscellaneous | : |
| Priliminary Register | : |
| Sessions | : |
| Deposition of Witness for | : PW |

Defence

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மகாலிங்கம் | | |
| தொழில்: | காவல் ஆய்வாளர் | | |
| தகப்பனார் பெயர் | : | ஜாதி | : |
| கணவர் பெயர் | : | | |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969, (Central Act 44 of 1969) on 04-08-2021

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாநல்லூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08.07.2007 ம்தேதி பெருமாநல்லூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த அக்பர்கான் மற்றும் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த எஸ்.பி. பாண்டியன் ஆகியோர்களின் கையெழுத்தும், கையொப்பமும் நன்கு பரிட்சயம். இந்த வழக்கில் ஏற்படுகின்ற காலதாமத்தினை தவிர்க்கும் வகையில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 08.07.2007 ம் தேதி தலைமை காவலர் நாகராஜன் என்பவர் நிலைய குற்ற எண் 166/2007 இதச பிரிவுகள் 279, 337 ன்கீழ் பதிவு செய்த வழக்கை உதவி ஆய்வாளர் அக்பர்கான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09.07.2007 ம் தேதி காலை 06.00 மணி அளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் சின்னச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே அ.சா.ஆ.10, அ.சா.ஆ.11 ஆகும். பின் சாட்சிகள் பிரேம்குமார், சுரேஸ்குமார், குமார், சின்னச்சாமி ஆகியோர்களை

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு அனுப்பி வைத்துள்ளார். சம்பவத்தில் காயம் அடைந்த சுதாகர் என்பவர் சிகிச்சை பலனின்றி மருத்தவமனையில் இறந்ததையடுத்து வழக்கின் சட்டப்பிரிவை மாறுதல் செய்து சட்ட மாறுதல் அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்தசட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆகம். பின் 09.07.2007 ம் தேதி திருப்பூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து சுதாகர் என்பவரின்பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கோண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.13 ஆகம்.சாட்சிகள் சண்முகம், விஜயா, சுரேஸ்குமார், தனபால், மணிவண்ணன்,பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளார். வழக்கு கோப்பினை பெற்று மேல் விசாரணைக்காக எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் 02.08.2007 ம் தேதி இரவு 20.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரியை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். விபத்தில் சம்பந்தப்பட்டஇரண்டு வாகனங்களையும் ஆய்வு செய்துஅறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் ஜெயக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து தணிக்கை சான்று பெற்றுள்ளார். விபத்தில்இறந்த சுதாகர் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சோமசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றுள்ளார். காயம் அடைந்த வித்யா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கிருஸ்ணராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்று பெற்றுள்ளார். பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

குறுக்கு விசாரணை

புகாரில் விபத்து நடந்த நேரத்தை குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. அ.சா.1 தனது சாட்சி வாக்குமூலத்தில் விபத்து நடந்த நேரத்தை குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.1 தான் சென்ற வாகனத்தின் பின்னால்தான் விபத்து நடந்ததாக புகாரிலும், போலீசாரின் விசாரணையிலும் கூறியுள்ளார் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும்போது எதிரியை பார்த்ததாக யாரும் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். விபத்தில் அடிபட்டு இறந்த சுதாகரனின் உறவினர்கள் நஸ்ட ஈடு பெற வேண்டும் என்ற நோக்கில் கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர புலன் விசாரணை

செய்யாமல் எதிரி மீது பொய்யாக வழக்கு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றும், ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கம் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.